இலங்கையின் பாதிக்கப்படக்கூடிய ஆற்றுப் பள்ளத்தாக்குகள், நீர்வடிப்பகுதிகள் மற்றும் நக்கிள்ஸ் மலைத்தொடரின் நீர்ப்பிடிப்புப் பகுதியின் கீழ்ப்பகுதியில் வசிக்கும் வாழ்வாதார விவசாயிகள் மற்றும் விவசாயத் தோட்ட சமூகங்களின் காலநிலை மீள்தன்மையை வலுப்படுத்துதல் செயற்திட்டம் - 2024

இலங்கையின் பாதிக்கப்படக்கூடிய ஆற்றுப் பள்ளத்தாக்குகள், நீர்வடிப்பகுதிகள் மற்றும் நக்கிள்ஸ் மலைத்தொடரின் நீர்ப்பிடிப்புப் பகுதியின் கீழ்ப்பகுதியில் வசிக்கும் வாழ்வாதார விவசாயிகள் மற்றும் விவசாயத் தோட்ட சமூகங்களின் காலநிலை மீள்தன்மையை வலுப்படுத்துதல் செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அப்போதைய விவசாயம், கால்நடை வளர்ப்பு, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு பின்னர் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் இயற்கை மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியம் (ஐயூசீஎன்) என்பவற்றுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட 2022 ஒகஸ்ட் 19 ஆம் திகதிய அமுல்படுத்தல் உடன்படிக்கையின் உப பிரிவு 5.16 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், அப்போதைய விவசாயம், கால்நடை வளர்ப்பு, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு பின்னர் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் விவசாய வனவியல் ஆராய்ச்சிக்கான சர்வதேச மன்றம் (ஐசீஆர்ஏஎவ்) ஆகியன செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் அமுலாக்கல் முகவராக உள்ளனர். பண்ணை மற்றும் நில முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்துதல், நீர் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் காலநிலை தொடர்பான அபாயங்களைத் தணிப்பதற்காக சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் மூலம் நக்கிள்ஸ் மலைத்தொடரின் பாதிக்கப்படக்கூடிய ஆற்றுப் பள்ளத்தாக்குகள், நீர்வடிப்பகுதிகள் மற்றும் கீழ்நிலைப் பகுதிகளில் வாழும் வாழ்வாதார விவசாயிகள் மற்றும் விவசாய பெருந்தோட்ட சமூகங்களின் காலநிலை பின்னடைவை வலுப்படுத்துவது செயற்திட்டத்தின் நோக்கமாகும். காலநிலை நெகிழ்திறன் கொண்ட நிலையான காணி முகாமைத்துவம், நிலையான காணி முகாமைக்கான பாதுகாப்பான நிதி வழிமுறைகள், நிறுவன திறனை வலுப்படுத்துதல் மற்றும் திட்ட முகாமைத்துவம் ஆகிய நான்கு கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றன. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 15,672 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48.98 மில்லியனானதுடன் அதில் ரூபா 12,729 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 39.78 மில்லியன் பசுமை காலநிலை நிதியத்தினால் (ஜீசீஎவ்) நிதியளிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது. எஞ்சிய ரூபா 9.2 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2023 ஆகஸ்ட் 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2029 ஜனவரி 16 அளவில் பூர்த்திசெய்ய திட்டமிட்டிருந்தது.

1.3 மறுக்கப்பட்ட அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் பந்தி 2.1 இல் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் எந்தவொரு அபிப்பிராயத்தினையும் தெரிவிக்கவில்லை.

1.4 மறுக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் பந்தி 2.1 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நான் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. இந் நிதிக் கூற்றுக்களுக்கான எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற முடியவில்லை.

1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களின்படி திட்டத்தின் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்து, ஒரு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குவது எனது பொறுப்பாகும். இருப்பினும், இந்த அறிக்கையின் பந்தி 2.1 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக, இந்த நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கு அடிப்படையாக அமைய போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற முடியவில்லை.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்கீட்டு குறைபாடுகள்/ கணக்காய்வு விடயம்	தொகை ரூபா மில்லியன்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	நிதியளிக்கப்பட்ட செயற்பாட்டு ஒப்பந்தத்தின்படி, பசுமைக் காலநிலை நிதியம் (ஜீசிஎவ்) இத்திட்டத்திற்கு ஐ.அ.டொலர் 39.18 மில்லியன் பெறுமதியான ரூபா 12,729 மில்லியனுக்கு சமமான தொகையை வழங்க ஒப்புக்கொண்டது. மேலும், கருத்திட்டச் செலவினங்களுக்காக ஜீசிஎவ் ஆனது சர்வதேச விவசாய வனவியல் ஆராய்ச்சி மையத்திற்கு (ஐசீஆர்ஏஎவ்) ஐ.அ.டொலர் 10.5 மில்லியன் பெறுமதியான ரூபா. 3,444 மில்லியனுக்கு சமனான தொகையை வழங்கியிருந்தது. இருப்பினும், ஐசீஆர்ஏஎவ் இனால் மேற்கொள்ளப்பட்ட திட்டச் செயற்பாடுகளுக்கான செலவினம் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஏனெனில், மொத்தச் செலவினத்தில் திட்ட முகாமைப் பிரிவுக்கு (பீஎம்யு) வழங்கப்பட்டிருந்த 73 சதவீதத் தொகைக்கு மட்டுமே நிதிக்	3,444	ஐசீஆர்ஏஎவ் இனால் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்ட ஐ.அ.டொலர் 10.5 மில்லியன் தொடர்பான நிதிக் கூற்றுக்கள் மற்றும் செலவின அறிக்கைகள் ஜிசிஎவ் கட்டமைப்பின் கீழ் விதிக்கப்பட்டுள்ள நிதி முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுத் தேவைகளுக்கு இணங்க ஐயுசிஎன் இன் மேற்பார்வையின் கீழ், எர்ன்ஸ்ட் அன்ட் ஜங் (இவை) நிறுவனத்தின் கணக்காய்வாளர்களினால் கணக்காய்வு செய்யப்படுகின்றன. அதன்படி, ஐசீஆர்ஏஎவ் இனால் செய்யப்பட்ட செலவினங்கள், அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினால் நிறுவப்பட்ட கணக்காய்வு ஏற்பாடுகள் மூலம் ஒரு	திட்டமானது மொத்த மானியத் தொகைக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க வேண்டும்.

	கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. மேலும், கணக்காய்வின் விசாலமானது பீஎம்யு இனால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தது.		சுதந்திரமான வெளிப்புறக் கணக்காய்வுச் செயன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றன. எனவே, இந்தச் செலவினங்கள் தனியாக மதிப்பாய்வு செய்யப்பட்டு சரிபார்க்கப்படுகின்றன. மேலும் அவை ஜிசிளவ் நக்கிள்ஸ் திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.	
(ஆ)	முந்தைய ஆண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் இறுதி மீதியானது, மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் பங்கு மூலதனத்தின் மதிப்பு ரூபா 26.46 மில்லியன் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	26.46	இந்த மீதிகள், ஆரம்ப மீதிகளாக முன்னோக்கி எடுத்துச் செல்லப்படவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.	மீதியை கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(இ)	மஹாவலி ஆலோசனைப் பணியகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி கூற்றுக்களின் பிரகாரம், கருத்திட்டத்திலிருந்து ரூபா 33.59 மில்லியன் நிலுவைத் தொகையாகக் காட்டப்பட்டிருந்தது, ஆனால் திட்ட நிதிக் கூற்றுக்களில் பணியகத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை எதுவும் வெளிக்காட்டப் பட்டிருக்கவில்லை.	33.59	திட்டத்திற்கு ஏற்பட்ட செலவினங்களைப் பற்றி அறிக்கை வழங்க மகாவலி ஆலோசனை பணியகத்திற்கு ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் தேவைப்படுவதனால், இதுபோன்ற வேறுபாடுகள் ஏற்படலாம்.	மீதிகளைக் கணக்கிணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(ஈ)	செலவின அறிக்கைகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள செலவினக் கூறுகள் 1, 2 மற்றும் 3 தொடர்பாக ரூபா 18.39 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	18.39	பேரேட்டிற்கும் அவற்றின் செலவின அறிக்கைகளுக்கும் இடையே வேறுபாடுகள் ஏற்படலாம்.	மீதிகளைக் கணக்கிணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள்	இணக்கமின்மை / கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	செயற்திட்ட ஆவணத்தின் பந்தி 92	திட்டச் செயற்பாடுகள் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்காக ஒரு திட்ட சபை தாபிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.	பதில்கள் பெறப்படவில்லை	திட்டச் சபை தாபிக்கப்பட வேண்டும்
(ஆ)	2024 ஆம் ஆண்டின் யூன் மாதம் 21 ஆம் திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் டீஎம்ஏ/1/2024 ஆம் இலக்க இடர் முகாமைத்துவச் சுற்றறிக்கை	செயற்திட்டத்தினால் இடர் முகாமைத்துவக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை	நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	செயற்திட்டத்தினால் இடர் முகாமைத்துவக் குழுக்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(இ)	2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 01/2024			
(i)	பிரிவு 5.2	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக, மீளாய்வாண்டில் பயிற்சித் திட்டங்களுக்காக ரூபா 6.11 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.	இதைச் செயல்படுத்தும் பங்குதாரரான எம்சீபி மேற்கொண்டதனால், தொடர்புடைய தகவல்களை அவர்களிடமிருந்தே நேரடியாகப் பெற வேண்டும்.	தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையினை கட்டாயமாக பின்பற்றவும்.
(ii)	பிரிவு 6	வெளிநாட்டு நன்கொடை வழங்கும் முகவர்களினால் முழுச் செலவும் ஏற்கப்பட்டாலன்றி, உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு ஆய்வுகள், பயிற்சிகள், கலந்துரையாடல்கள், மாநாடுகள் அல்லது பயணங்களில் பங்கேற்கக் கூடாது. இருப்பினும், இந்த விதிமுறைக்கு முரணாக, செயற்திட்ட பணிப்பாளர்,	அக்காலப்பகுதியில், அமைச்சின் ஏனைய உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபட்டிருந்தனர். கருத்திட்டத்தின் பிரதான பதீட்டிலிருந்து வெளிநாட்டுப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதியானது இந்த	தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

செயற்திட்ட நிதியிலிருந்து ரூபா 1,483,879.60 தொகை செலவு செய்து, 2024 ஏப்ரல் 21 முதல் 27 வரை மலேசியாவில் நடைபெற்ற கார்பன் வர்த்தகம் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த ஐஆர்ஆர்டிபி பயிற்சிப் பட்டறையில் பங்கேற்றிருந்தார்.	நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது.	

3. பௌதீக முன்னேற்றம்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	கருத்திட்ட ஆவணத்தின் பிரகாரம், முதல் ஆண்டில் ஐ.அ.டொலர் 1,458,504 மதிப்பிலான செயற்பாடுகளையும், 31 திசெம்பர் 2024 இற்குள் மொத்தமாக ஐ.அ. டொலர் 14,878,965 மதிப்பிலான செயற்பாடுகளையும் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், 2024 ஆம் ஆண்டு திசெம்பர 31 ஆம் திகதியின் பிரகாரம், ஏற்பட்ட செலவினம் ரூபா 437,551,232 ஆகும், இத்தொகையானது ஐ.அ.டொலர் 1,414,358 தொகைக்குச் சமமாகும். இது 2024 வரை எதிர்பார்க்கப்பட்ட செலவினத்தில் 9.8 சதவீதத்தைக் குறிக்கிறது.	மனிதவளப் பற்றாக்குறை மற்றும் திரைசேரியிலிருந்து கட்டுநிதியினைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, அறிக்கைக் காலத்தில் திட்டச் செயற்பாடுகளைச் செயற்படுத்துவது தாமதமானது.	செயற்திட்டப் பணிகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	விவசாய அபிவிருத்தித் திணைக்களம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், மாகாண விவசாயத் திணைக்களம் மற்றும் இலங்கையின் மகாவலி அதிகாரசபை ஆகியவை முக்கிய பங்குதாரர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தன. கருத் திட்டத்தில், ரூபா 907.02 மில்லியன் ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டு, 2024 ஆம் ஆண்டில் இந்நிறுவனங்களுக்கு ரூபா 264.9 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தபோதிலும், நிபந்தனைக்குட்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளத் தவறியதன் விளைவாக, 2024 திசெம்பர் 31 ஆம் திகதியின் பிரகாரம் இத்திட்டத்திற்கு ரூபா 77	கருத்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் செயற்பாடுகளைத் தொடங்குவதற்காக அதனைச் செயற்படுத்தும் பங்குதாரர்களுக்கு நிதி வழங்கப்பட்டது.	சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினர்களுக்குமிடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் தகவல் தொடர்பு வழிமுறைகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	மில்லியன் தொகை திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது.		
(இ)	வரையறுக்கப்பட்ட (தனியார்) மஹாவலி ஆலோசனைப் பணியகமானது கருத்திட்ட நடவடிக்கைகளுக்காக சேவை வழங்குனராக தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட பணிகள் மற்றும் போதிய மேற்பார்வையின்றி பணியகத்திற்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டின் போது பல்வேறு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிறுவனத்திற்கு ரூபா 128.83 மில்லியன் வழங்கப்பட்டு அதில் ரூபா 95.24 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது, அதே வேளையில் 31 திசெம்பர் 2024 இல் அன்னளவாக ரூபா 33.59 மில்லியன் பயன்படுத்தப்படாமல் மீதமாக காணப்பட்டது.	செயற்திட்ட முகாமையின் கோரிக்கையின் பிரகாரம், எம்சிபி அத்திட்டத்திற்கு ஆலோசகர்களையும் பிற உத்தியோகத்தர்களையும் வழங்குகிறது.	கருத்திட்ட நிதி வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும்.
(ஈ)	காணி மற்றும் நீர் முகாமையினை மேம்படுத்துதல், நிதி நிலைத்தன்மையை ஏற்படுத்துதல் மற்றும் அரசாங்க ஆதரவை வலுப்படுத்துதல் ஆகிய மூன்று முக்கியக் கூறுகள் மூலம் கருத்திட்டத்தின் நோக்கங்களை அடையத் திட்டமிடப்பட்டிருந்தன. இருப்பினும், 31 திசெம்பர் 2024 நிலவரப்படி, செயற்திட்டத்தின் ஒட்டுமொத்தப் பௌதீக செயல் முன்னேற்றம் 6 சதவீதம் என்ற மிகக் குறைந்த அளவில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	சம்மந்தப்பட்ட பங்குதாரர் அரசாங்க நிறுவனங்கள், மேலதிக கருத்திட்டப் பணிச்சுமையை நிர்வகிக்கத் தங்களிடம் போதுமான பணியாளர்கள் இல்லை என்று குறிப்பிடுகின்றன. இக்காரணங்களினால், எதிர்பார்க்கப்பட்ட அளவிலான முன்னேற்றத்தை அடைவது மிகவும் கடினமாகிவிட்டது.	சம்மந்தப்பட்ட அனைத்துப் பங்குதாரர்களுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் தகவல் தொடர்பு வழிமுறைகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	நக்கிள்ஸ் திட்டத்தின் கீழ் இலங்கை மஹாவலி அதிகாரசபை ஒரு முக்கிய பங்குதாரர் நிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. மேலும், 2024 ஆம் ஆண்டில் செயற்திட்டச் செயற்பாடுகளுக்காக ரூபா 126.12 மில்லியன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தபோதிலும், மீளாய்வாண்டின் போது அத்தொகையில் ரூபா 37.18 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதி வரை கருத்திட்டத்திற்கும் அதிகாரசபைக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம்	ஏற்கனவே 51 அடிப்படை ஆய்வுகள் நிறைவடைந்துள்ளன. 450 புதிய அடிப்படை ஆய்வுகளைத் தொடங்குவதற்கான பெறுகை செயன்முறை தற்போது நடைபெற்று வருகிறது.	திட்டங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. மேலும், திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்காக அது தொடர்பான விடயங்கள் குறித்த நீண்டகாலத் தகவல்களைப் புரிந்துகொள்ளும் பொருட்டு அதிகாரசபை ஒரு அடிப்படை ஆய்வை நடத்தியிருக்கவில்லை.		
(ஊ)	2024 ஆம் ஆண்டில் திட்டங்களை செயற்படுத்துவதற்காக, மூன்று தவணைகளில் எல்கடுவ பயிர்செய்கை நிறுவனத்திற்கு ரூபா 37.60 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 07 ஒக்டோபர் 2025 வரை ரூபா 25.38 மில்லியன் தொகையே செலவிடப்பட்டிருந்ததோடு மீதி ரூபா 12.22 மில்லியன் தொகை காணப்பட்டது. செயற்திட்ட காலத்தின் ஒரு வருடம் கடந்திருந்தும், திட்டத்திற்காக 2024 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நிதியில் 32 சதவீதம் பயன்படுத்தப்படாமல் இருந்தது.	கம்பனியின் உயர் முகாமையில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் ஆரம்பக் கட்டத்துடன் ஒப்பிடும்போது ஜூலை 2025 இற்கு பின்னர் கருத்திட்டச் செயற்பாடுகள் மந்தமடைந்தன என்பது அவதானிக்கப்பட்டது.	எதிர்பார்க்கப்படும் இலக்கைக் நிர்ணயிக்கப்பட்ட காலத்தினுள் அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 வாகனப் பயன்பாடு

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	இத்திட்டத்திற்காக 2023/2024 ஆம் ஆண்டுகளில் வாகன வாடகைக்காக ரூபா 35 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மேலும், அந்த வாகனங்கள் நேரடியாகவும், வரையறுக்கப்பட்ட மஹாவலி ஆலோசனை (தனியார்) பணியகம் மூலமாகவும் பெறப்பட்டிருந்தன. வாகனங்களை வழங்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்திடம் தேவையான திறன், அனுபவம், ஆளணி அல்லது பௌதீக வளங்கள் இல்லை என்பதும், அந்நிறுவனத்திடம் ஒரு பெறுகைப் பிரிவு இல்லை என்பதும் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டன. மேலும், திறைசேரியின் அனுமதியினை பெறாமலும், தேசிய பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமலும் வாகனங்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தன.	இருப்பினும், இந்தக் பெறுகைச் செயன்முறை நிறைவடைவதற்கு முன்னர், இத்திட்டம் எம்சிபி இடமிருந்து வாகனச் சேவைகளைப் பெற்றுக் கொண்டது. இவ்வேற்பாடு, ஒரு சேவை வழங்குநராக எம்சிபி இற்கு இசைவானதாக இருந்ததுடன், திட்ட ஆவணத்திற்கு இணங்க திட்டச் செயற்பாடுகளின் தொடர்ச்சியையும் உறுதி செய்தது.	பெறுகைச் செயன்முறை குறித்து விசாரணை நடத்தி, பெறுகை வழிகாட்டுதல்களை மீறும் பொறுப்புள்ள உத்தியோகத்தர்களை அடையாளம் காணவும்.

(ஆ)	இக்கருத்திட்டம் பல்வேறு வகையான ஜீப் வண்டிகளை வாடகை அடிப்படையில் எடுத்திருந்ததுடன், 3000சீசீ என்ஜின் திறன் கொண்ட டொயோட்டா பிராடோ எஸ்யூவி ஒன்றை ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து மாத வாடகையாக ரூபா 920,000 (எரிபொருள் உட்பட) என்ற அடிப்படையில் கூட்டுமொத்தமாக ரூபா 7,106,880 செலுத்திப் பெற்றிருந்தது. 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை இவ்வாகனம் திட்டப் பணிப்பாளருக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கான எரிபொருள் படியாக ரூபா 59,235 வழங்கப்பட்டிருந்தது. இவ் வாகனத்தைப் பெறுவதில் பெறுகை வழிகாட்டிகள் பின்பற்றப்படாமலும் வாகன வாடகை தொடர்பாக கருத்திட்டத்திற்கும் நிறுவனத்திற்கும் இடையே எந்தவொரு ஒப்பந்தமும் செய்யப்படாமலும் குறித்த வாகனம் பெறப்பட்டிருந்தது.	அதன்படி, திட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு இணங்க இத்திட்டம் எம்சிபி இடமிருந்து இச் சேவைகளைப் பெற்றுள்ளது.	பெறுகைச் செயன்முறை குறித்து விசாரணை நடத்தி, பெறுகை வழிகாட்டுதல்களை மீறும் பொறுப்புள்ள உத்தியோகத்தர்களை அடையாளம் காணவும்.
(இ)	எம்சிபி மற்றும் வாகன வழங்குநருக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் கருத்திட்டத்திற்குத் தேவைப்படும் வாகனங்களின் வகைகள், அவற்றின் எண்ணிக்கை அல்லது மாதாந்த வாடகைத் தொகை ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மாறாக, இவை கம்பனியினால் தீர்மானிக்கப்படும் என்று கூறிப்பிடப்பட்டிருந்தது. அவ் ஒப்பந்தத்தின் பிரகாரம், வழங்கப்பட்ட வாகனங்கள் கருத்திட்டப் பணிகளுக்கு மாத்திரமல்லாமல், நிறுவனத்தின் அன்றாட அலுவலகச் செயற்பாடுகள், பிற திட்டங்கள் மற்றும் அமைச்சு/தலைவர் அலுவலகத்தின் பணிகளுக்கும் தேவைப்படுத்தப்பட்டது. வாகன வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களில் பயணித்த தூரம், மேலதிக நேரப் பணி நேரம் மற்றும் இரவு நேரப் பணி நேரம் போன்ற விபரங்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும், சம்பந்தப்பட்ட நாட்களில் பயணித்த	அந்த நேரத்தில், கருத்திட்டகள ஆய்வு அறிக்கை மற்றும் அடிப்படை அளவீட்டு அறிக்கைகளை உடனடியாகத் தயாரிக்க வேண்டியிருந்தது. இந்த அவசரத் தேவையின் அடிப்படையிலும், செயற்பாட்டுத் தேவைகளைக் கருத்தில் கொண்டும், திட்டமானது எம்சிபி இன் ஊடாக இரண்டு (02) கெப் ரக வாகனங்கள், ஒரு (01) வேன் மற்றும் ஒரு (01) ஜீப் ஆகிய வாகனங்களை வாடகைக்கு எடுத்தது. மேலும், 2024 ஆம் ஆண்டின் போது திட்டச் செயற்பாடுகளை விரைவுபடுத்துவதற்காக எம்சிபி இல் இருந்து மேலதிகமாக இரண்டு (02) கெப் ரக வாகனங்களைக் கோரியது.	கோரப்பட்ட வாகன விபரங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

	குறிப்பிட்ட இடங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, வாகனங்கள் கருத்திட்டப் பணிகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டன என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. இதன் விளைவாக, 2023 ஆம் ஆண்டில் ரூபா 6.64 மில்லியனும், 2024 ஆம் ஆண்டில் ரூபா 18.16 மில்லியனும் செலுத்தப்பட்ட வாகன வாடகைத் தொகையை திட்டத்திற்காக பிரத்தியேகமாகச் செய்யப்பட்ட செலவினங்களாகக் கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை.		

3.3 மனிதவள முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்கள்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	கருத்திட்டச் செயற்பாடுகள் ஆரம்பிக்கும் போது திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவையான குறைந்தபட்ச பணியாளர்களுக்குக் கூட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெற்றிருக்காததோடு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதியன்று திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் கடந்த நிலையில், செயற்திட்ட துணைப் பணிப்பாளர் மற்றும் செயற்திட்டக் கணக்காளர் பதவிகள் பதில்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தன. அத்துடன், துணைத் திட்ட பணிப்பாளர் மற்றும் திட்டச் செயலாளர் பதவிகள் திட்டத்தின் மூலம் நேரடியாக நியமிக்கப்பப்படாமல், அரசுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட (தனியார்) மஹாவலி ஆலோசனை பணியகம் என்ற நிறுவனத்தின் ஊடாக கையாளப்பட்டிருந்தன. மேலும், பெறுகை நிபுணர், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு உத்தியோகத்தர், மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகிய பதவிகள் வெற்றிடமாகவே இருந்தன.	முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டிருந்தபோதிலும், செயற்திட்டத்தின் ஆரம்பகட்ட உருவாக்கத்திற்காக அப்பதவிகளுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்ற வேண்டியதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது.	இத்திட்டம், தேவையான பணியாளர் கட்டமைப்புக்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடம் இருந்து மேலும் தாமதமின்றி முறையான அனுமதியினை பெற வேண்டும். மேலும், முக்கிய பதவிகளுக்கான நிரந்தர ஆட்சேர்ப்புப் பணிகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2019/01 இன் உப பிரிவு 2.3.2 இன் பிரகாரம்,	தற்போது, நீர்ப்பாசன அமைச்சின் திட்ட ஆளணி மற்றும் முன்னேற்ற	சுற்றறிக்கையில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்கவும்.

	இத்திட்டத்திற்கு ஒரு திட்ட பணிப்பாளர் முழுநேர அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும், இது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை .அதற்குப் பதிலாக, 2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2024 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் வரை பதிற்கடமை அடிப்படையில் திட்டப் பணிப்பாளராக நீர்ப்பாசன அமைச்சின் மேலதிக செயலாளர் (காணி மற்றும் சட்டம்) நியமிக்கப்பட்டிருந்தார். கணக்காய்வுத் திகதியான 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி வரை ஒரு முழுநேரத் திட்டப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அவ் உத்தியோகத்தர் பதில்கடமை அடிப்படையில் தனது கடமைகளைத் தொடர்ந்து ஆற்றி வந்துள்ளார்.	முகாமைத்துவப் பிரிவினால் (பிபிஎம்) திட்டப் பணிப்பாளர் பதவிக்கான நேர்காணல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.	
(இ)	ஆளணி ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அவர்களின் ஊதியம் தொடர்பாக திட்ட ஆவணம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதிய சுற்றறிக்கை இலக்கம் 01/2019 ஆகியவற்றின் பிரகாரம் கருத்திட்ட அலுவலகத்திற்குத் தெளிவாக வழிகாட்டப்பட்டிருந்தபோதிலும், மேலும் கருத்திட்டத்திற்கான பணியாளர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டிருந்தபோதிலும், அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டப் பணியாளர்களுக்கு மேலதிகமாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் எந்தவொரு பணியாளருக்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களததின் முன் அனுமதி தேவைப்பட்டது. சுற்றறிக்கையின் உப பிரிவு 2.1.1 இன் பிரகாரம், கருத்திட்டத்திற்கு நேரடியாகப் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்குப் பதிலாக வரையறுக்கப்பட்ட (தனியார்) மகாவலி ஆலோசனை பணியகத்தின் மூலம் பல்வேறு பதவிகளுக்குத் திட்டமானது தனிநபர்களை ஆட்சேர்ப்பு செய்துள்ளது, இதன் மூலம் சுற்றறிக்கையின் வழிகாட்டுதல்களிலிருந்து விலகிச்	குறிப்பிட்ட கடமைகள் ஒதுக்கப்பட்ட பின்னரே ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது, மேலும், சேவைத் தேவைகளின் அடிப்படையில் பணிக்காலம் நீட்டிக்கப்பட்டிருந்தது. கருத்திட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, ஆலோசனை சேவைகளைப் பெறுவதற்காக மஹாவலி ஆலோசனைப் பணியகம் நியமிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், ஆலோசனை சேவைகளுக்காக அடையாளம் காணப்பட்ட ஆலோசகர்கள், பணியகத்தால் பின்பற்றப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி நியமிக்கப்பட்டனர்.	சுற்றறிக்கையில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்கவும்.

சென்றுள்ளது. கணக்காய்வின் போது கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம் 2025 ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரை இம் முறையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மொத்தம் 87 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 120.3 மில்லியன் சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.